**எஹலியகொட பிரதேச சபை**
**இரத்தினபுரி மாவட்டம்**

-------------------------------------------------

**1. நிதிக்கூற்றுக்கள்**

---------------------------

**1.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்**

------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2017 மார்ச் 29 திகதியும், முன்னைய ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2016 யூன் 02 ஆந் திகதியும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டின் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2017 ஆகஸ்ட் 21 ஆந் திகதி சபையின் செயலாளருக்கு அனுப்பிவைக்கப்பட்டது.

**1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்**

-----------------------------------------------------

இந்த அறிக்கையின் 1.3 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து எஹலியகொட பிரதேச சபையின் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுத் தத்துவங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்**

-------------------------------------------------------------------

**1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்**

--------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட ரூபா 61,479 தொகையான 04 மேசைகள் மூலதனமாக்கப்படாமையின் காரணமாக மீளாய்வாண்டில் நிலையான சொத்துக்கள் அப் பெறுமானத்தால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(ஆ) முத்திரை வரி பதிவேட்டின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு செலுத்த வேண்டிய முத்திரை வரி மீதி ரூபா 24,315 ஆக இருந்த போதிலும், நிதி நிலைமைக் கூற்றில் அது ரூபா 278,121 ஆகக்

காண்பிக்கப்பட்டமையின் காரணமாக நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 253,806 இனால் அதிகரித்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(இ) 2016 ஆம் ஆண்டில் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் 04 ஆயுர்வேத நிலையங்களில் எஞ்சிய மருந்து இருப்புக்கள் ரூபா 496,095 ஆக இருந்த போதிலும், நிதிக்கூற்றுக்களில் அது ரூபா 830,941 ஆகக் காண்பிக்கப்பட்டமையின் காரணமாக சொத்துக்கள் ரூபா 334,846 இனால் அதிகரித்துக் காண்பிக்க்பபட்டிருந்தது.

(ஈ) மீளாய்வாண்டின் போது செலவிடப்பட்ட ரூபா 294,148 தொகையான மூலதனச் செலவினம் மீண்டெழும் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டமையின் காரணமாக செயற்பாட்டு மிகை அந்த அளவால் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டின் போது போக்குவரத்துத் தொடர்புகள் மற்றும் அவசிய சேவைகள் செலவின விடயத்தின் செலவினம் ரூபா 157,383 இனால் அதிகரித்தும் வட்டிக் கொடுப்பனவு செலவின விடயத்தின் செலவினம் ரூபா 159,662 இனால் குறைத்தும் கணக்கீடு செய்யப்பட்டிருந்தது.

(ஊ) மீளாய்வாண்டின் போது ரூபா 318,188 இற்கு கொள்வனவு செய்யப்பட்டிருந்த நூலகப் புத்தகங்கள் ரூபா 307,590 ஆக மூலனமாக்கப்பட்டமையின் காரணமாக நிலையான சொத்துக்கள் ரூபா 10,598 குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது.

### 1.3.2 இணக்கஞ் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

---

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) மீளாய்வாண்டின் இறுதியில் நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 02 கணக்கு விடயங்களுக்குரிய மீதியை, பட்டோலைகளுடன் ஒப்பீடு செய்த போது ரூபா 1,223,418 கூட்டுத்தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் கிடைக்க வேண்டிய மீதியாக ரூபா 96,255,541 தொகை காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்குரிய பேரேட்டுக் கணக்கு மீதிகளின் கூட்டுமொத்தம் ரூபா 96,344,694 ஆனமையால் ரூபா 89,153 தொகையான இணக்கமின்மை காணப்பட்டது.

(இ) 03 நானாவித செலவின விடயங்கள் தொடர்பில் செலவினப் பேரேட்டிற்கும் நிதிக்கூற்றுக்களுக்குமிடையே கூட்டுமொத்தமாக ரூபா 557,229 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

### 1.3.3 பெறவேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 07 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிடவேண்டிய ரூபா 62,653 கூட்டுத்தொகையான கிடைக்க வேண்டிய ஊழியர் கடன் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 34,407,719 கூட்டுத்தொகையான கடன்கொடுத்தோர் 2017 பெப்ரவரி 17 ஆந் திகதி வரையிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை.

### 1.3.4 சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமைகள்

சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமைகள் கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் |
|---|---|
| (அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப்பிரமாணக் கோவை | |
| (i) நிதிப்பிரமாணம் 103(1) | 2015 திசெம்பர் 31 இல் உள்ளவாறு பொருள் மெய்மையாய்வு அறிக்கையின் பிரகாரம் ரூபா 45,780 தொகையான பொருட்கள் பற்றாக்குறை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ii) நிதிப்பிரமாணம் 371(2)(இ) | வழங்கப்பட்ட முற்பணம் பணிகள் நிறைவு பெற்றதும் உடனடியாகத் தீர்க்கப்பட வேண்டிய போதிலும், 2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 வருடங்கள் முதல் 21 வருடங்கள் வரையிலான காலம் |

| | | |
|---|---|---|
| | | கடந்துள்ள ரூபா 1,343,504 கூட்டுத்தொகையான 59 முற்பணங்கள் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. |
| (iii) | நிதிப்பிரமாணம் 396(ஈ) | வழங்கப்பட்ட திகதியிலிருந்து 06 மாதங்கள் முதல் 04 வருடங்கள் வரையிலான காலம் கடந்திருந்த போதிலும் கொடுப்பனவிற்குச் சமர்ப்பிக்கப்படாத ரூபா 245,421 கூட்டுத்தொகையான 07 காசோலைகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (iv) | நிதிப்பிரமாணம் 571(2) | 2011 ஆம் ஆண்டு முதல் 2014 யூன் 30 ஆந் திகதி வரையான காலப்பகுதிக்குரிய ரூபா 447,504 தொகையான வைப்புக்களை ஓய்வுபெறச் செய்வதற்கு 2017 பெப்ரவரி 17 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) | இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1988 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் IV(ஆ) பகுதியின் 5(5) அவது உப விதி | அனுமதியற்ற 02 நிர்மாணங்கள் தொடர்பாக எழுத்துமூல அறிவித்தல் வழங்கி 01 மாதத்திற்கும் 12 மாதங்களுக்கும் இடையிலான காலமொன்று கடந்திருந்த போதிலும், 2017 பெப்ரவரி 17 ஆந் திகதி வரையிலும் மேலதிக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |

## 2. நிதி மீளாய்வு

-------------------------

### 2.1 நிதி விளைவுகள்

-------------------------------

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2016 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான சபையின் மீண்டுவரும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 12,823,818 ஆக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மீண்டெழும் செலவினத்தை விஞ்சிய வருமானம் ரூபா 6,789,168 ஆக இருந்தமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நிதி விளைவில் ரூபா 6,034,650 தொகையான அதிகரிப்பு காணப்பட்டது.

## 2.2 பகுப்பாய்வு ரீதியான நிதி மீளாய்வு

நிதி விளைவு ரூபா 6,034,650 இனால் அதிகரித்தமை தொடர்பில் 04 வருமான விடயங்களில் ரூபா 4,307,691 அதிகரிப்பும், 05 செலவின விடயங்களில் ரூபா 2,990,332 குறைவும் பிரதானமாகத் தாக்கமளித்திருந்தது.

## 2.3 வருமான நிர்வாகம்

### 2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம்

மீளாய்வாண்டிற்காகச் சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் மற்றும் நிலுவை வருமானம் தொடர்பான தகவல்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| வருமான விடயம் | மதிப்பீடு செய்யப்பட்ட | உள்ள படியான | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவை |
|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| வீதவரியும் வரியும் | 6,688 | 9,039 | 12,858 |
| வாடகை | 4,365 | 5,945 | 880 |
| அனுமதிப்பத்திரக் கட்டணம் | 777 | 804 | 7 |
| ஏனைய வருமானம் | 54,279 | 45,652 | 22,174 |

### 2.3.2 வருமான சேகரித்தலின் செயலாற்றல்

மீளாய்வாண்டில் மதிப்பீடு செய்யப்பட்ட வருமானத்தை சேகரிக்கப்பட்ட வருமானத்துடன் ஒப்பீடு செய்த போது ஆதனவரி, வாடகை மற்றும் அனுமதிப்பத்திரக் கட்டணம் போன்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதீடு செய்யப்பட்ட வருமானத்தை விட முறையே 09 சதவீதம், 48 சதவீதம் மற்றும் 06 சதவீதம் என அதிகரித்திருந்ததுடன் பிடியாணைக் கட்டணமும் தண்டப்பணமும், ஏனைய வருமானம் மற்றும் அரசாங்கத்தின் பங்களிப்பு என்ற வருமான விடயங்களில் சேகரிக்கப்பட்ட வருமானம் பாதீடு செய்யப்பட்ட அளவை விட முறையே 22 சதவீதம், 23 சதவீதம் மற்றும் 32 சதவீதத்தால் குறைவடைந்திருந்தன.

**2.3.3 ஆதனவரி**

---------------------

2016 திசெம்பர் 31 இல் உள்ளவாறு நிலுவை ஆதனவரி மீதி ரூபா 12,611,903 ஆக இருந்ததுடன் அதில் 01 வருடம் முதல் 47 வரடங்கள் வரையிலான காலமாகக் கொண்டுவரப்படுகின்ற ரூபா 10,000 இற்கு மேற்பட்ட நிலுவை மீதியுடன் 92 ஆதனவரி அலகுகளிலிருந்து கிடைக்க வேண்டிய ரூபா 1,892,624 மீதியும் உள்ளடங்கியிருந்தது.

**2.3.4 ஏனைய வருமானம்**

---------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1988 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் IV(ஆ) பிரிவின் 39 ஆம் இலக்கத்தின் கீழ் காண்பிக்கப்பட்ட 02 ஆவது உப விதியின் பிரகாரம் அறிவித்தல் காட்சிப்படுத்தலுக்காக அனுமதிப்பத்திரமொன்றைப் பெற்றுக் கொள்வதற்கு விண்ணப்பப்படிவமொன்று சபைக்குச் சமர்ப்பிக்கப்படாதிருக்கும் போது 2016 ஆம் ஆண்டில் 43 சந்தர்ப்பங்களின் போது அனுமதிப்பத்திரம் வழங்கப்பட்டிருந்தது.

(ஆ) சப்ரகமுவ மாகாண சபையின் உள்ளகக் கணக்காய்வு திணைக்களம் விநியோகித்திருந்த உள்ளகக் கணக்காய்வு ஐயவினாவின் பிரகாரம் 2016 திசெம்பர் 09 ஆந் திகதி சபையிலிருந்து கொழும்புப் பக்கம் திவுரும்பிட்டிய வரையுள்ள அறிவித்தல் பதாதைகள் தொடர்பாக மேற்கொண்ட மெய்மையாய்வின் போது பணம் அறவிடப்படாமல் அறிவித்தல்களைக் காட்சிப்படுத்திய 57 சந்தர்ப்பங்களிலிருந்து கூட்டுமொத்தமாக ரூபா 613,045 தொகை அறவிடவேண்டியிருந்ததாக சுட்டிக்காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், அக்கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

(இ) எஹலியகொடயில் அமைந்துள்ள சபைக்குச் சொந்தமான இரண்டு இறைச்சிக் கடைகளிலிருந்து 2013 ஆம் ஆண்டிற்கும் 2015 ஆம் ஆண்டிற்கும் உரியதாக முறையே ரூபா 150,209 மற்றும் ரூபா 202,200 தொகையான நிலுவை வருமானமொன்று அறவிட வேண்டியதாகக் காணப்பட்டது.

(ஈ) கெட்டஹெத்த பல்நோக்கு கட்டிடத்திற்குரிய ஒரே தடவையில் பெறப்படும் பணத்தை (Key Money) அறவிடுதல் மாதாந்த தவணையாக

அறவிடப்பட்டிருந்ததுடன் 2017 யூன் வரையிலும் 05 கடைகளிலிருந்து ரூபா 59,999 தொகை குறைவாக அறவிடப்பட்டிருந்தது. மேலும் கடையொன்றிலிருந்து ரூபா 330,000 தொகையான மொத்தமான ஒரே தடவையில் அறவிடும் பணமும் அறவிடவேண்டியதாகக் காணப்பட்டது.

### 2.3.5 நீதிமன்றத் தண்டப்பணம் மற்றும் முத்திரைக் கட்டணம்

04 காணிப்பதிவாளர் அலுவலகங்களிலிருந்து 2013 ஆம் ஆண்டு முதல் 2016 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதிக்குரியதாக அறவிடவேண்டிய முத்திரைக் கட்டண வருமானத்தை இனங்காண்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 செயலாற்றல்

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) வருடாந்த பாதீட்டின் பிரகாரம் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக ரூபா 400,000 ஒதுக்கப்பட்டிருந்த போதிலும், தனித்தனியாக செயற்திட்டம் இனங்காணப்பட்டிருக்கவில்லை. எனினும், மீளாய்வாண்டின் போது மத்திய அரசு, சப்ரகமுவ மாகாண சபை மற்றும் பிரதேச சபைக்குரிய நிதிஏற்பாடுகளின் கீழ் கூட்டுமொத்தமாக ரூபா 30,911,978 தொகையான 113 செயற்திட்டங்கள் நிறைவேற்றப்பட்டிருந்தன.

(ஆ) மீளாய்வாண்டில் மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் விரிவாக்கத்திற்காக சபை அதிகாரப் பிரதேசத்தில் காணப்படுகின்ற கிராம உத்தியோகத்தர் பிரிவுகளுடன் ஒப்பீடு செய்தபோது ஒரு கிராம உத்தியோகத்தர் பிரிவிற்காக 16 வேலைகள் நிறைவேற்றப்பட்டிருந்ததுடன் அந்த பிரிவைவிட அதிக சனத்தொகையொன்று இருக்கின்ற 07 ஆம் பிரிவில் அதனைவிட குறைந்த வேலைகளின் எண்ணிக்கை நிறைவேற்றப்பட்டிருந்தது. மேலும் 16 கிராம உத்தியோகத்தர் பிரிவில் எந்த வேலைகளும் நிறைவேற்றப்பட்டிருக்க வில்லை.

## 3.2 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

-----------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2012 ஆம் ஆண்டில் நிர்மாணங்கள் பூர்த்தி செய்யப்பட்ட கெட்டஹெத்த சந்தைத் தொகுதியின் கீழ் மாடியில் தற்காலிகமாக ஒதுக்கப்பட்ட 9x9'ஆன 08 பகுதிகள் மற்றும் மேல்மாடியில் 3239 சதுர அடியளவான முழுப்பகுதியும் 2017 யூன் வரையிலும் வருமானத்தை உழைக்கக்கூடிய வகையில் பயன்படுத்தியிருக்கவில்லை.

(ஆ) வங்கிக் கணக்கொன்றில் 2012 சனவரி முதல் கொண்டுவரப்படுகின்ற ரூபா 12,141 தொகையான இனங்காணப்படாத வேறுபாடு 2017 யூன் வரையிலும் சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படாதிருந்ததுடன் 2011 யூன் மாதத்தின் போது காசேட்டின் பெறுவனவுகளின் கீழ் பதியப்பட்டிருந்த ரூபா 2,300 தொகையான தபாற் கட்டளையின் பெறுமதி வங்கி மீதியில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை.

(இ) உள்ளூராட்சி அமைச்சின் மூலம் 2015 பெப்ரவரி 06 ஆந் திகதி சபைக்கு கிடைத்திருந்த மோட்டார் கிறேடருக்காக செயற்படுத்துனர் ஒருவர் காணப்படாமையின் காரணமாக கிடைத்த திகதியிலிருந்து பயன்படுத்தப்படாமல் பயன்னற்றுக் காணப்பட்டது.

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

-----------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 2008 சனவரி 25 ஆந் திகதிய 1533/16 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் ''இ'' பகுதியில் குறித்த செயற்திட்டம் தொடர்பாக சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரமொன்று விநியோகிக்கும் போது உள்ளூராட்சி நிறுவனங்கள் செயற்பட வேண்டியிருந்த முறை தொடர்பாக மத்திய சுற்றாடல் அதிகாரசபையின் மூலம் விநியோகிக்கப்பட்ட உள்ளூராட்சி நிறுவனங்களுக்கு அதிகாரங்களைக் கையளித்தல் மற்றும் அதிகாரங்களை அமுல்படுத்துதல் தொடர்பான ஆலோசனைக் கோவையின் பிரகாரம் சபையின் அதிகாரப்பிரதேசத்தில் அமைந்துள்ள சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப் பத்திரம் பெறவேண்டிய கைத்தொழில்கள் தொடர்பாக சபை கவனம் செலுத்தி அந்த வேலைகள் தொடர்பாக சரியான

மேற்பார்வையொன்று மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்கு சபைக்கு வருகைதருகின்ற கைத்தொழிலாளர்களுக்கு மாத்திரம் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்பட்டிருந்ததுடன் 2017 பெப்ரவரி 17 ஆந் திகதி வரையிலும் 14 கைத்தொழில்களிலிருந்து ரூபா 61,580 தொகை மாத்திரம் சுற்றாடல் அனுமதிப்பத்திர வருமானமாக சேகரிக்கப்பட்டிருந்தது. மேலும் சுற்றாடல் பாதுகாப்பு அனுமதிப்பத்திரம் பெறவேண்டிய 18 நிறுவனங்கள் கைத்தொழில் மற்றும் வியாபார அனுமதிப்பத்திரங்களைப் பெற்றிருந்த போதிலும் சுற்றாடல் அனுமதிப்பத்திரம் பெற்றிருக்கவில்லை.

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 2009 ஏப்ரல் 17 ஆந் திகதிய 1597/8 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியில் பகிரங்கப்படுத்தப்பட்ட 1986 இன் நகர அபிவிருத்தி அதிகாரசபையின் திட்டமிடல் மற்றும் கட்டிட கட்டளைகளில் மேற்கொள்ளப்பட்ட திருத்தங்களின் V ஆவது பட்டோலையின் பிரகாரம் தொலைபேசி பரிவர்தனைக் கோபுரங்கள் நிர்மாணிக்கும் போது கட்டணம் அறவிடப்பட்டிருக்கவில்லை.

### 3.4 ஒப்பந்த நிர்வாகம்

-----------------------------------------

பொதுக் கிணறாகப் பயன்படுத்துவதற்கு ரூபா 50,387 தொகை செலவில் 2016 யூன் 30 ஆந் திகதி புனரமைக்கப்பட்ட கனேகொட குடிநீர் கிணற்றில், 02 தனியார் வீடுகளுக்கு மோட்டார் நீர்ப்பம்பியைப் பயன்படுத்தி நீரைப் பெற்றுக் கொள்ளும் எதிர்பார்ப்பில் 02 குழாய்கள் பொருத்தப்பட்டிருந்தமை பௌதீகக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது வெளிப்படுத்தப்பட்டமையால் அந்த நிர்மாணங்களிலிருந்து எதிர்பார்க்கப்பட்ட நோக்கம் நிறைவேற்றப்படாதிருந்தமை அவதானிக்கப்பட்டது.

### 3.5 கழிவுப் பொருள் முகாமைத்துவம்

---------------------------------------------------------------

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(அ) 1987 இன் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் அதிகாரச்சட்டத்தின் 126(IX)(ஆ) பிரிவின் பிரகாரம் மலம் அகற்றல் மற்றும் கழிவு அகற்றுதல் மற்றும் அதற்கான கட்டணம் அறவிடல் உப விதிகளுக்குரிய விடயத்தின் அம்சமாக காண்பிக்கப்பட்டிருந்த போதிலும், சபையினால் மேற்கூறப்பட்ட விடயத்திற்காக உப விதியொன்றை விதித்துக் கொள்வதற்கு 2017 பெப்ரவரி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2016 ஆம் ஆண்டின் போது கழிவுப்பொருள் முகாமைத்துவம் தொடர்பாக முறையான திட்டமொன்று சபை வசம் காணப்படாதிருந்ததுடன் முழுமையான சபையின் அதிகாரப் பிரதேசத்தையும் மேவுகை செய்யும் வகையில் கழிவுகளை சேகரித்தல் மேற்கொள்ளப்படாதிருந்தமையும் கழிவுப்பொருட்களை சேகரிக்கும் போது உக்கும் மற்றும் உக்காத கழிவுகளாகவும் வகைப்படுத்தலும் செய்யப்பட்டிருக்கவில்லை.

(இ) சபையினால் 2014 ஆம் ஆண்டின் போது கூட்டுப் பசளை உற்பத்தி ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும், 2016 ஆம் ஆண்டின் ஆரம்பம் முதல் அந்த செயற்திட்டம் தோல்வியடைந்து உற்பத்தி நிறுத்தப்பட்டிருந்தது. இந்த செயற்திட்டத்திற்காக மூன்று ஊழியர்கள் மாத்திரம் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும், உரிய சுகாதார வசதிகள் மற்றும் ஏனைய வசதிகள் காணப்படாமையின் அடிப்படையில் அந்த கூட்டுப்பசளைத் தளத்தில் சேவையில் ஈடுபடல் மறுக்கப்பட்டிருந்தது. 2017 யூன் வரை இந்த பிரச்சினைகளுக்கு பொருத்தமான வேலைத்திட்டமொன்றை அமுல்படுத்துவதற்கு சபை தவறியிருந்தது.

(ஈ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் 1988 ஆகஸ்ட் 23 ஆந் திகதிய 520/7 ஆம் இலக்க அதிவிஷேட வர்த்தமானியின் IV(ஆ) பகுதியின் 9.4 ஆவது உப விதியின் பிரகாரம் வறுமையைக் காரணமாகக் கொண்டு சயினால் விடுவிப்புச் செய்யப்பட்ட குடியிருப்பாளர் அல்லாத கழிவு அகற்றுதல் சேவையின் மூலம் சேவை வழங்கப்படுகின்ற ஏதாவது இடமொன்றில் குடியிருப்பவர்களினால் சபை அதற்காக நிர்ணயிக்கப்பட்ட கழிவுப் பொருள் அகற்றுதல் கட்டணமொன்று சபைக்கு மாதாந்தம் செலுத்த வேண்டியிருந்த போதிலும், சபையினால் கழிவுப் பொருள் அகற்றுதல் சேவைக்காக கட்டணம் அறவிடுவதற்கு முறையான வேலைத்திட்டமொன்று அமுல்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 வருடாந்த பெறுகைகள் திட்டம்

மீளாய்வாண்டிற்காக பெறுகைகள் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

மீளாய்வாண்டிற்காக வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டமொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு

கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவை அமைத்து அமுல்படுத்துவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.4 தீர்க்கப்படாதுள்ள மற்றும் பதிலளிக்கப்படாத கணக்காய்வு ஐயவினாக்கள்

2016 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் கணிப்பிடக் கூடிய பெறுமதி ரூபா 5,999,572 தொகையான 03 கணக்காய்வு ஐயவினாக்களுக்கு பதிலளிக்கப்பட்டிருக்க வில்லை.

## 5. முறைமைகள் மற்றும் கட்டுப்பாடுகள்

பின்வரும் முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுத் துறைகள் தொடர்பில் விஷேட கவனம் வேண்டப்படுகின்றது.

| | முறைமைகள் | | அவதானிப்புக்கள் |
|---|---|---|---|
| (அ) | கணக்கீடு | (i) | கைவிடல் வழு காணப்பட்டமை |
| | | (ii) | ஒதுக்கீடுகள் மேற்கொள்ளப்படாமை |
| | | (iii) | குறைத்துக் காண்பிக்கப்பட்டமை |
| | | (iv) | இணக்கமின்மைகள் காணப்பட்டமை |
| (ஆ) | வருமான நிர்வாகம் | (i) | நிர்ணயிக்கப்பட்ட வருமானங்கள் இனங்காணப்படாமை |
| | | (ii) | வருமானங்கள் அறவிடப்படாமை |
| (இ) | கழிவுப் பொருள் முகாமைத்துவம் | | முறையான வகையில் அகற்றப்படாமை |
| (ஈ) | சொத்துக் கட்டுப்பாடு | | சொத்துக்கள் பயனற்றுக் காணப்படுகின்றமை மற்றும் பாவனைக்கு பொருத்தமற்ற சொத்துக்கள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிராமை |